TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8040819

1. District மாவட்டம் : Theni District PS: காவல்நிலையம் VAC, Theni Year ஆண்டு: 2023 FIR No. மு.த.அ. எண் 06/2023 Date நாள்: 28/11/2023

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as amended by the Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 17/10/2023, Date to நாள் வரை: October last week-2023, 15/11/2023, 17/11/2023, 22/11/2023, 27/11/2023 and 28/11/2023
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28/11/2023 Time நேரம் : 16.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28/11/2023 Time நேரம் : 17.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் About 40 Kms, South
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி O/o the Kadamalaigundu-Mayiladumparai Panchayat Union, Mayiladumparai, Andipatti Taluk, Theni District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. Jayakumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P. Vanarajan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1983 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Agriculture (g) Address : முகவரி D.No. 228, Kombai Thozhu, Mayiladumparai, Andipatti Taluk, Theni District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Bose, Cashier,
O/o the Kadamalaigundu-Mayiladumparai Panchayat Union,
Mayiladumparai, Andipatti Taluk, Theni District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— Computer typed separate sheet enclosed —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................. on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 28.11.23 | [signature] 28/11/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28.11.2023 / 1900hrs

Name: பெயர் P. Sundararajan
Rank: நிலை Dy. Supdt. of Police V&A.C. Theni dt. No. எண் .........

12. F.I.R. contents (Attach separate sheet if required):

முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி, ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.**06/2023**-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

<u>**சமர்ப்பிக்கப்படுகிறது:**</u> தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணைக்கண்காணிப்பாளர் ஆகிய நான் இன்று 28.11.2023-ம் தேதி 16.00 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்தபோது தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா, கோம்பைத் தொழுவைச் சேர்ந்த திரு.வனராஜன் என்பவரது மகன் திரு.ஜெயக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் மேற்படி முகவரியில் எனது குடும்பத்தினருடன் குடியிருந்து கொண்டு இளவம்பஞ்சு விவசாயம் செய்து வருகிறேன். நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயத்துடன் பால் மாடு வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் எங்களது கடமலைக்குண்டு-மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் அரசு ஒப்பந்த பணிகளை செய்யலாம் என்று எண்ணி ஒப்பந்ததாரராக பதிய எனது பெயரில் ஒப்பந்ததாரர் பதிவு விண்ணபத்தை 20.09.2023-ம் தேதி கடமலைக்குண்டு- மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இருந்த ஒரு அலுவலரிடம் கொடுத்தேன். விண்ணபத்துடன் வீட்டு பட்டா, சொத்து மதிப்புச் சான்று, வில்லங்கச் சான்று, ஆதார் கார்டு, பான் கார்டு, வங்கிக்கணக்கு விபரம் மற்றும் **GST** எண் ஆகியவற்றை இணைத்து கொடுத்தேன். பின்னர் அடுத்த நாள் 21.09.2023-ம் தேதி கடமலை-மயிலை ஊராட்சி அலுவலகம் சென்று எனது விண்ணப்பத்தை நேற்று 20.09.2023-ம் தேதி பெற்றுக் கொண்ட நபரை பார்த்து விசாரித்தேன். அவர் எனது விண்ணபத்தை வாங்கி பதிவு செய்து நம்பராக்கி அருகில் இருந்த கிளார்க் திரு.முத்துக்குமார் என்பவரிடம் கொடுத்து விட்டதாக சொன்னார். அதன்படி கிளார்க் திரு.முத்துக்குமார் அவர்களிடம் கேட்க அவர் உங்களது விண்ணப்பம் தன்னிடம் தான் உள்ளது என்றும், அதில் **BDO**-வின் சுருக்கொப்பம் வாங்க வேண்டும் என்று சொல்லி அங்கிருந்த காசாளர் திரு.போஸ் அவர்களை அழைத்து **BDO** அவர்களிடம் கையொப்பம் வாங்கி வரும்படி சொன்னார். திரு.போஸ் அவர்களும் திரு.முத்துக்குமார் அவர்களிடமிருந்து எனது விண்ணபத்தை வாங்கி அதை என்னிடம் கொடுத்து நீங்களே **BDO**-விடம் கையெழுத்து வாங்கி வாருங்கள் என்று சொன்னார். அதன்படி நானே **BDO** திரு.இளங்கோவன் அவர்களிடம் சென்று விண்ணபத்தில் சுருக்கொப்பம் வாங்கி வந்து திரு.போஸ் அவர்களிடம்

கொடுத்தேன். காசாளர் திரு.போஸ் அதை வாங்கி வைத்துக் கொண்டார். பின்னர் 17.10.2023-ம் தேதி பகல் சுமார் 12.00 மணிக்கு மேற்படி அலுவலகம் சென்று திரு.போஸ் அவர்களை பார்த்து எனது விண்ணப்பம் பற்றி கேட்டேன். அப்போது அவர் என்னுடைய விண்ணப்பத்தை எடுத்து அத்துடன் படிவம் ஒன்றை இணைத்து அதில் அவரே கைப்பட பூர்த்தி செய்து ஊராட்சி ஒன்றிய உதவி பொறியாளரிடம் கையொப்பம் வாங்கி வரும்படி சொன்னார். அதையும் நானே சென்று மேற்படி படிவத்தில் உதவி பொறியாளர் திரு.ராமமூர்த்தி அவர்களிடம் கையொப்பம் வாங்கி வந்து காசாளர் திரு.போஸ் அவர்களிடம் கொடுத்தேன். அப்போது திரு.போஸ் அவர்கள் ஒன்றிய ஒப்பந்ததாரராக பதிவு செய்ய வைப்புத் தொகையாக ரூ.2,000/-கருவூலத்தில் கட்ட வேண்டும். அப்போது தான் உங்களுக்கு ஒப்பந்ததாரர் பதிவுச் சான்று கிடைக்கும் என்றும், அதை என்னிடமே கொடுங்கள் அதை நானே கட்டி விட்டு ரூ.2,000/-க்கு இரசீது வாங்கி தருகிறேன். அத்துடன் ஆபிஸ் செலவிற்கு ரூ.10,000/- தனியாக தர வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் ஒப்பந்தம் பதிவு செய்வதற்கே இவ்வளவு தொகையா என்று கேட்டுவிட்டு முதலில் டெபாசிட் தொகை ரூ.2,000/-தை கட்டி இரசீதை கொடுங்கள் என்று சொல்லி ரூ.2,000/-யை திரு.போஸ் அவர்களிடம் கொடுத்தேன். அவரும் பணத்தைப் பெற்றுக் கொண்டு கருவூலத்தில் கட்டி இரசீது பெற்று விரைவில் ஒப்பந்ததாரர் பதிவுச் சான்று கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் நீங்களும் நான் கேட்ட பணத்தை கொண்டு வாருங்கள் என்று சொன்னார். பின்னர் அக்டோபர் மாதம் கடைசி வாரத்தில் ஒருநாள் மேற்படி அலுவலகம் சென்று திரு.போஸ் அவர்களை பார்த்து டெபாசிட் கட்டிய இரசீது பற்றி கேட்க, அவர் முதலில் நான் கேட்ட பணம் ரூ.10,000/- என்னாச்சு என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னால் புரட்ட முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் சரி என்று ரூ.3,000/- குறைத்து ரூ.7,000/-ஆக கொண்டு வந்து கொடுத்தால் தான் கருவூலத்தில் பணம் செலுத்தி இரசீது பெற்றுத்தருவேன் என்று சொன்னார். பின்னர் நான் தீபாவளி பண்டிகை முடித்து 15.11.2023-ந் தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு எனது செல் நம்பர்: 9965781083-ல் இருந்து திரு.போஸ் அவர்களின் செல் நம்பர்: 7639674953-க்கு போன் செய்து எனது விண்ணப்பம் பற்றி கேட்டேன். அதற்கு அவர் நான் கேட்ட பணம் ரூ.7,000/- கொண்டு வந்தால் மட்டுமே வேலை நடக்கும் என்று சொன்னார். அதன்பிறகு 17.11.2023-ந் தேதி மாலை சுமார் 04.30 மணிக்கும் 22.11.2023-ந் தேதி மாலை சுமார் 03.30 மணிக்கும் எனது செல்லில் இருந்து திரு.போஸ் அவர்களின் செல்நம்பருக்கு அழைத்து கேட்டேன். அதற்கு அவர் நீ செல்போனில் பேசிக் கொண்டிருந்தால் வேலை நடக்காது, நேரில் வந்து நான் கேட்ட பணத்தை கொடுத்தால் தான் வேலை நடக்கும் என்று சொன்னார். அதன்பிறகு எனக்கு விவசாய வேலைகள்

இருந்ததால் சென்ற 27.11.2023-ந் தேதி மதியம் சுமார் 02.00 மணிக்கு கடமலை-மயிலை, ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சென்று திரு.போஸ் அவர்களை பார்த்து கேட்கலாம் என்று சென்றேன். அப்போது அந்த அலுவலகத்திற்கு முன்பக்கம் இருந்து திரு.போஸ் அவர்கள் தனது இருசக்கர வாகனத்தில் வெளியே வந்தார். அப்போது அவரை சந்தித்து எனது விண்ணப்பம் பற்றி கேட்டேன். அப்போது அவர் முதலில் நான் கேட்ட பணம் ரூ.7,000/-த்தை கொடுத்தால் மட்டுமே வைப்புத் தொகையை கட்டி இரசீது வாங்குவேன். இல்லாவிட்டால் நடக்காது என்று சொன்னார். நானும் டெபாசிட் தொகையையும் திரு.போஸ் அவர்களிடம் கொடுத்துவிட்டு என்ன செய்வதென்று தெரியாமல் வந்து விட்டேன். பின்னர் இன்று 28.11.2023-ந் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு திரு.போஸ் அவர்களை கடமலை-மயிலை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சந்தித்து எனது விண்ணப்பம் பற்றி கேட்க அவர் நான் கேட்ட பணம் என்னாச்சு என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னால் புரட்ட முடியாது என்று சொல்ல, அதற்கு அவர் ரூ.2,000/- குறைத்து ரூ.5,000/-யை கொண்டு வந்து அவரது மயிலாடும்பாறை அலுவலகத்தில் நாளை மதியத்திற்குள் கொடுத்தால் உடனே டெபாசிட் கட்டி மற்ற வேலைகள் நடக்கும் இல்லாவிட்டால் நீ அழைந்து கொண்டு இருக்கவேண்டியதுதான் என்று கராராக சொல்லிவிட்டார். பின்னர் நான் வீட்டிற்கு வந்து யோசித்துப் பார்த்ததில் ஊராட்சி ஒன்றிய ஒப்பந்ததாரராக பதிவுச் சான்று பெற ஏற்பாடு செய்ய திரு.போஸ் அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.5,000/-கொடுத்து பெற என் மனம் விரும்பவில்லை. அதனால் மேற்படி ஒப்பந்ததாரர் பதிவுச்சான்று பெற ஏற்பாடு செய்ய லஞ்சமாக பணம் ரூ.5,000/-கேட்ட கடமலை-மயிலை, ஊராட்சி ஒன்றிய அலுவலக காசாளர் திரு.போஸ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு இந்த புகாரை அளிக்கிறேன். அத்துடன் 20.09.2023-ந் தேதியிட்ட எனது விண்ணப்ப கடித புகைப்பட நகலையும் இணைத்துள்ளேன். திரு.போஸ் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.5,000/-யும் கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள. Sd/- XXXXX (வ.ஜெயக்குமார், 28.11.2023)

Sir, Received this complaint on 28.11.2023 at 16.00 hrs. A confidential verification was conducted in respect of the complaint as well as the complainant through sources and found to be genuine and good respectively. The reputation of the accused was also verified and found to be bad. Since, a prima facie case is made out in the complaint and after getting oral permission

from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai, a case in Theni, Vigilance and Anti-Corruption Crime No.06/2023, u/s 7 of the PC Act 1988 as amended by the PC (Amendment) Act, 2018 was registered on 28.11.2023 at 17.00 hrs. Sd/- (P.Sundararajan, Deputy Superintendent of Police, V&AC, Theni).

The original FIR, original complaint along with copy of the application of Tr.V.Jayakumar, S/o.Vanarajan, Kombai Thozhu, Andipatti Taluk, Theni District is sent to the Chief Judicial Magistrate/ Special Judge for PC Act Cases, Theni District and copies are sent to the superior officers concerned.

28/11/2023

(P.SUNDARARAJAN)
Dy. Supdt. of Police,
Vigilance and Anti-Corruption,
Theni Detachment.